★ வெளிவிவகார இணை அமைச்சர் நட்வர்சிங் அறிவிப்பு

# யாழ்ப்பாணத்தின் மீது பெரும் தாக்குதல் நடத்த இலங்கை அரசு தயாராகின்றது

இலங்கை அரசு யாழ்ப்பாணத்தில் பெரும் தாக்குதல் ஒன்றை நடாத்த தயாராகி வருவதாகவும் இதனுல் பெரும் எண்ணிக்கையில் உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் ஏற்படும் என்றும் பாரத வெளியுறவு இணை அமைச்சர் திரு. நட்வர்சிங் நேற்று ராஜ்ய சபாவில் தெரிவித்தார். திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர் திரு. வை. கோபாலசாமியும் வேறு ஒன்பது உறுப்பினர்களும் இலங்கைப் பிரச்சினை பற்றி கேட்டகேள்விகளுக்கு அமைச்சர் பதில் அளித்தார். யாழ். பெரியாஸ்பத்திரியை மூடுமாறு இலங்கை அரசு அறிவித்துள்ளதால், இத்தாக்குதல் நடப்பதற்கு வாய்ப்பு இருப்பதால் தமிழ்மக்கள் பெரிதும் பாதிக்கப்படக்கூடும் எனவும் அவர் தெரிவித்தார். போராளிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே பகைமை உணர்வும் சந்தேகமும் வளர்ந்து வருவதால் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பது சந்தேகமாயுள்ளது எனவும் அமைச்சர் கூறினார். வன்முறைச் சம்பவங்களினால் அப்பாவிமக்கள் பலர் பலியாகியிருப்பது துரதிர்ஷ்டவசமானது என்று குறிப்பிட்ட அவர் ராணுவத்தீர்வு காணவேண்டும் என இலங்கை அரசு கூறியிருப்பது பாரதத்துக்கு பெரும் கவலை அளிக்கிறது என்றார். இருதரப்பினரும் வன்முறைகளை கைவிட்டு ஐக்கிய இலங்கையில் தமிழ் மக்களின் விருப்பத்துக்கு இணங்க பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். இப்பிரச்சினைக்கு ராணுவத்தீர்வு காணமுடியாது எனக்கூறிய அமைச்சர் பேச்சுவார்த்தை மூலமான தீர்வுஒன்றே நீண்டகாலப்போக்கில் திருப்திகரமான முடிவை அளிக்கும் என்றார். வன் செயல் ...6ஆம் பக்கம் பார்க்க

விலை ரூபா 1-25

REGISTERED AS A NEWSPAPER

முரசொலி

தேசிய தமிழ்த் தினசரி

MURASOLI

முரசு 1 ஒலி 161 சனி 09 - 05 - 1987 (சித்திரை 26) றம்ழான் 10

★ சில முக்கியமான நிபந்தனைகளின் அடிப்படையில்

24 MAY 1987

# யாழ். ஆஸ்பத்திரியை மூடுவது மறுதிகதிவரை ஒத்திவைப்பு!

## பாதுகாப்பு வலயம் உருவாக்க யோசனை

(கொழும்பு)

யாழ்ப்பாணம் போதனு வைத்தியசாலையை மூடிவிடுவதென்ற தீர்மானத்தை அரசாங்கம் மறு அறிவித்தல் வரை ஒத்தி வைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கொழும்பு சென்ற யாழ். தூதுக் குழுவினர் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியை சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட போதே சில நிபந்தனைகளின் அடிப்படையில் வைத்தியசாலையை தொடர்ந்து இயங்க அரசாங்கம் அனுமதி வழங்கியது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற தூதுக்குழுவினர் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலியை நேற்று அவரது அலுவலகத்தில் சந்தித்து வைத்தியசாலையை மூடிவிடுவதால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை எடுத்து விளக்கினர்கள். இச்சந்திப்பில் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற தூதுக்குழு உறுப்பினர்களுடன் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனும் கலந்து கொண்டார். வைத்தியசாலையை மூடினுல் பல்கலைக்கழக வைத்திய மாணவர்கள் எதிர்நோக்க —6ஆம் பக்கம் பார்க்க

### உயர் அதிகாரி மாற்றம்?

யாழ். ஆஸ்பத்திரி மூடப்பட வேண்டுமென்று உத்தரவிட்டதையடுத்து, யாழ்ப்பாணத்தின் உயர்மட்ட அதிகாரியொருவர் திடீரென இடமாற்ற உத்தரவுக்குள்ளானதாகத் தெரியவந்துள்ளது. —6ஆம் பக்கம் பார்க்க

## மாநகரசபை ஊழியரின் கண்டன ஊர்வலம்



யாழ். போதனு வைத்தியசாலையை மூடும் அரசின் உத்தரவை ஆட்சேபித்தும், அந்த உத்தரவை உடனடியாக ரத்துச் செய்யுமாறு கோரியும் யாழ் நகர மக்களும், மாநகராட்சி மன்ற ஊழியர்களும் ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் தலைமையில் கண்டன ஊர்வலம் ஒன்றை மேற்கொண்டனர் ஊர்வல முடிவில் கண்டன மகஜரொன்றை ஆணையாளர் சிவஞானம், யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. இராமநாதனிடம் கையளித்தார்.

காலை 9.15 க்கு நல்லூர் வீர றலில் ஆரம்பமான இந்த ஆஸ்பத்திரி வீதி வழியாக மாகாளி அம்மன் ஆலய முன் ஊர்வலம் பருத்தித்துறைவீதி, ... 6 ஆம் பக்கம் பார்க்க

## டில்லி தூதுவர் திலகரட்ண கொழும்பு வந்துள்ளார்

புதுடில்லிக்கான இலங்கைத் தூதுவர் திரு. பேர்னுட் திலகரட்ண நேற்று திடீரென கொழும்பு வந்து சேர்ந்தார்.

ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, தேசியபந்தோபஸ்து அமைச்சர் லலித்அத்துலத்முதலி ஆகியோருடன் முக்கிய ஆலோசனை நடத்த இவர் இங்கு அழைக்கப்பட்டுள்ளார். கடந்தவாரம் திரு. திலகரட்ண இந்திய வெளியுறவு செயலர் திரு. கே. பி. எஸ். மேனனைச் சந்தித்து உரையாடியது குறிப்பிடத்தக்கது.

இலங்கைத் தமிழர்கள்மீது மேற்கொள்ளவிருக்கும் ராணுவ நடவடிக்கைபற்றிய இந்தியாவின் நிலைப்பாடுபற்றியகடிதத்தையும் திலகரட்ண இலங்கை கொண்டு வந்துள்ளார் எனவும், ராணுவ நடவடிக்கையை கைவிட்டுஇனப் —6ஆம் பக்கம் பார்க்க

## ஸ்ரீமாவோ ஜே. ஆருக்கு சவால்!

## பிரபாகரனை கைதுசெய்ய படைகளால் முடியாதா?

[கொழும்பு]

புலிகளின் தலைவர் பிரபாகரன் தற்பொழுது யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கிறர். இவரை அரசாங்கத்தினுல் ஏன் கைது செய்யமுடியாது. பயங்கரவாதி ஒருவர் ஒளித்திருக்கும் இடத்தைத் தெரிந்துகொண்டும் அவரைக் கைது செய்ய முடியாத ஜெயவர்த்தன, தொடர்ந்தும் ஏன் பதவியிலிருக்க வேண்டும் என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா.

"நான் பிரதமராக இருக்கும்போது பன்னிரண்டாயிரம் பேரைக் கொண்ட ஆயுதப் படை மட்டுமே இருந்தது. இன்றைய அரசாங்கம் தனது — 6ஆம் பக்கம் பார்க்க

## அச்சுவேலியில் ஹெலி சுட்டு ஒருவர்பலி; ஐவர் படுகாயம்

(அச்சுவேலி)

அச்சுவேலியில் நேற்று பிற்பகல் இரண்டு ஹெலிகப்டர்கள் மேற்கொண்டதாக்குதலில்ஒருவர் கொல்லப்பட்டார். ஐவர் படுகாயமுற்றனர். பல வீடுகளும், கடைகளும் சேதமடைந்தன.

நேற்று பிற்பகல் 1.30 மணிபோல் அச்சுவேலி, வயாவிளான் வீதியில் தொழிற்பேட்டைச்சந்தியில் இத்தாக்குதல் நடைபெற்றது. மண் ஏற்றிச் சென்ற லொறி ஒன்றை வயாவிளானில்இருந்து துரத்திவந்த ஹெலிகப்டரே இப்பகுதியில் தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. தாக்குதலினுல் லொறி சேதம —6ஆம் பக்கம் பார்க்க

பட்டியல் - 6

# மல்லாகத்தில் ஆங்கில பயிற்சிபெறத் தெரிவான பல்கலைக்கழக புதுமாணவர்

**மல்லாகம் மகாவித்தியாலய மண்டபத்தில் ஆங்கில பயிற்சி பெறத் தெரிவான பல்கலைக்கழக புதிய மாணவர்கள் விபரம் வருமாறு:-**

முகாமைத்துவக் கல்வி: ஏ. ஆனந்தராஜா [உரும்பராய்], எஸ். மோசஞ [மயிலிட்டி], வி. நந்தீஸ்வரன் [மல்லாகம்] கே. நிரஞ்சன் [அளவெட்டி], டி. போலின் [சுன்னாகம்], பி. ரஜனி [அளவெட்டி], எஸ். கல்யாணி [மாவிட்டபுரம்], ரி. வரதன் [அளவெட்டி].

வர்த்தகம்: கே. கே. எஸ் ஐங்கரன் [அளவெட்டி], எம். பிறேமசந்திரன் [மயிலிட்டி], பி. பொன்னுத்துரை [உரும்பராய்] விக்னேஸ்வரன். [உரும்பராய்], வி. விஜயபாஸ்கர் [அளவெட்டி].

கலை: எம். பல்மதி [அம்பனை], கே. மைதிலி [தெல்லிப்பழை] ரி. நந்தகௌரி [சுன்னாகம்], எஸ். பி. பஞ்சாட்சரம் [உரும்பராய்], ரி. பிரேமளா [தெல்லிப்பழை] பி பாலகுமார் [மாவிட்டபுரம்], எஸ். தர்மவதி [மாவிட்டபுரம்] எஸ். ஜெயரூபன் [மாவிட்டபுரம்], கே. மாதினி [ஊரெழு],

ஜி. வி. பி. வி ஆர். துரோணிக்கா [அளவெட்டி], டபிள்யூ ரஞ்ஜினி [சுன்னாகம்] எஸ். சர்வலேஜினி [தெல்லிப்பழை] எஸ். சாந்தினி [அளவெட்டி].

வைத்தியம்: சி.மேரிசுரூபிணி [தெல்லிப்பழை], எஸ். மதிவதனி [அம்பனை] ஆர். ரமணி [அளவெட்டி], எஸ். ராம் மனோகர் [மல்லாகம்] எஸ். ராதை [சுன்னாகம்], எஸ். சிவரூபி [இடைக்காடு], பி. சுசித்திரா [சுன்னாகம்], ஈ. தேவநேசன் [மருதனுமடம்] கே. சந்திரகுமார [இணுவில்],

விசையம்: ஆர். ரதிகலா [ஏழாலை], பி. சுரேஷ்பாலன் [காங்கேசன் துறை], ஆர். யசோதா [ஏழாலை], பி. கலைவாணி [அச்சுவேலி], கே. தயாமினி [காங்கேசன் துறை],

உயிரியல் விஞ்ஞானம்: எஸ். சரவணமுத்து [உரும்பராய்], வி. எஸ். சசிகலா [அளவெட்டி] வி. சோமசுந்தரம் [உரும்பராய்] ரி. சுகந்தி [தெல்லிப்பழை], கே. சுமதி [உரும்பராய்], வி சுந்தரலிங்கம் [உரும்பராய்], ஏ. சுதர்சனு [ஏழாலை தெற்கு]. கே. தபோதினி [பத்மேனி], எச். ஆர். அந்தோனிப்பிள்ளை [ஏழாலை தெற்கு], என். சித்திரா [கந்தரோடை], எஸ். சித்திரா [சுன்னாகம்], ரி. கௌரிமனோகரி [தெல்லிப்பழை] எஸ். ஜெகதா [நீர்வேலி], ஏ. கந்தசாமி [சுன்னாகம்], வி. பொன்னுத்துரை [மயிலிட்டி], எஸ். ராதா [சூராவத்தை], எல். இராசரத்தினம் [ஊரெழு கிழக்கு], கே. இரத்தினேஸ்வரி [அளவெட்டி], வி. இரத்தினம் [சுன்னாகம்] ஆர். திருச்செல்வம் [உரும்பராய்] எஸ். வத்சலா [நீர்வேலி], எஸ். ரி. சஜமுகன் [சிறுப்பிட்டி].

பொறியியல் II: பி. கோபாலகிருஷ்ணன் [புன்னாலைக்கட்டுவன்], கே. தயாளன் [மல்லாகம்].

பொறியல்; I என். கேதீஸ்வரன் [தெல்லிப்பழை] பி.என். சுகந்தன [தெல்லிப்பழை].

பொருள் அளவையியல்:- ரி. பாஸ்கரன் [வறுத்தலைவிளான்], பி. சிறிதரன் [கொல்லங்கலட்டி]. ரி. விஜயகுமார் [அச்சுவேலி].

பொறியியல் I தொடர்: பி. அநுசுயா [அச்சுவேலி], கே. பாலகிருஷ்ணஐயர் [இடைக்காடு], என். சுகுணவதி [அச்சுவேலி],

பௌதிக விஞ்ஞானம்: பி. இன்பரதி [தெல்லிப்பழை]. வி. ஜனார்த்தனகுமாரி [காங்கேசன துறை]. ஈ. கே. வி. ஜோன்ஸன் [அச்சுவேலி], ஜே. சுந்தசாமி [உரும்பராய்], என. கந்தவனச்செல்வன் [தையிட்டி]. பி. கோமதி [அச்சுவேலி], வி. குமாரதாசன் [உரும்பராய்]. எஸ். மணிமாலா [அச்சுவேலி] ஆர். எம். இராசேந்திரம் [அச்சுவேலி] எஸ். ஏ. ரவிராஜ் [காங்கேசன்துறை] எஸ். சத்தியகுமார் [ஊரெழு மேற்கு], ஆர், செல்வராஜ், [இடைக்காடு], எஸ். சிறீதரன்] [ஏழாலை தெற்கு] பி. கமலேந்திரன் [சுன்னாகம்].

"கிறீன்பீஸ்" இயக்க ஆய்வாளர் வேண்டுகோள்

# டொல்பின் கடற்பன்றியல்ல; பிடித்து அழித்துவிடாதீர்

டொல்பின் என்னும் கவர்ச்சி வாய்ந்த கடல்வாழ் உயிரினத்தை மீனவர்கள் பிடித்து கடற்பன்றி எனக் கூறி விற்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியான பாதுகாப்பு உத்தரவாதம் பெற்ற கடல்வாழ் முலையூட்டி இனமான டொல்பின் இலங்கை கடற்பகுதிகளிலும் சில காலங்களில் வந்து சேர்வது அவதானிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவிலுள்ள கிறீன்பீஸ் சூழல் பாதுகாப்பு இயக்க ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கலாநிதிநாகேஸ் கதிர்காமநாதன் இதுபற்றித் தகவல் தருகையில், டொல்பின்கள் வடபகுதி மீனவர்களால் கடற்பன்றி என்று கூறி விற்கப்படுவதை தாம் அவதானித்துள்ளதாகத் தெரிவித்தார்

பாதுகாக்கப்பட வேண்டிய இந்தக் கடல்வாழ் உயிரினம் உணவுக்குரிய மீனினம் அல்ல எனவும் இதைப் பாதுகாப்பதில் அனைவரும் அக்கறை காட்ட வேண்டும் எனவும் கலாநிதி கதிர்காமநாதன் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். கிறீன்பீஸ் சூழல் பாதுகாப்பு இயக்க இயக்குநருக்கும் தாம் இதுபற்றி அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## புதிய நியமனம்

(வட்டுக்கோட்டை)

பின்தங்கிய காட்டுப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு சுழிபுரம் சுகாதார அபிவிருத்திக் கழகத்தினர் தமது செலவில் ஒரு வசதிக் கட்டண ஆசிரியரையும், சிறுவர் பராமரிப்பாளர் ஒருவரையும் நியமித்து இப் பகுதிக்குச் சேவையாற்றி வருகின்றனர்.

## சித்திரச் சிறுவிளம்பரம்

### கல்வி

புதிய வகுப்புகள் க. பொ. த. (உயர்) 89 கலை/வர்த்தகம், விஞ்ஞானம். ஆண்டு 4, 5, 6, 7, 8, 9, 11 ஆரம்பம்: 9-5-87 பி. ப.3மணி மொடேன் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி.

04122

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


# பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா ★ நோர்வே
★ ஜேர்மனி ★ லண்டன் (U.K.)

செல்ல விரும்புவோருக்கு கொழும்பில் இருந்து நேரடி ஒழுங்குகள் செய்துதரப்படும். எமது குழு 10-15 திகதி செல்ல இருப்பதால் உங்கள் பிரயாணத்திற்கு எமது காரியாலயத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும். கடந்த 16-04-87 இல் நோர்வே பிரயாணம் செய்தவர்கள் வெற்றிகரமாக முடித்து உள்ளார்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

● சவூதி அரேபியாவுக்கு

கீழ்க்கண்ட வெற்றிடங்கள் உள்ளன. உடனடியாக எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

| | S. R. | | S. R. |
|---|---|---|---|
| Stevedoring Labrs | 350 | Winchman | 650 |
| Ware House Labrs | 350 | Forklift Operator | 850 |
| Cleaning Labours | 325 | Trailer Driver | 850 |
| Kitchen Helper | 325 | Bus Driver | 650 |
| Gang Foreman | 550 | Crane Operator | 700 |
| Ship Foreman | 650 | Camp Boss | 800 |
| Tally Clerk | 650 | Male Nurse | 800 |
| Document Clerk | 600 | Technical Manager | 1700 |
| Office Staff | 600 | Operational Manager | 1700 |
| Pay Roll Clerk | 650 | Administrative Manager | 1000 |
| Cargo Supervisor | 750 | | |
| Tally Checkers | 700 | Doctor | 2000 |

## சவூதி அரேபியாவுக்கு பணிப்பெண்கள் தேவை

**சம்பளம் 400 S. R**

இரண்டு கிழமைக்குள் பிரயாண ஒழுங்குகள் செய்துதரப்படும்

● சவூதி அரேபியாவுக்கு

பிரயாணம் செய்வதற்குப் பாஸ்போட் கொடுத்தவர்களுக்குச் சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டு விட்டன. அவர்கள் உடன் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

05011

## ஒமேகா ரவல்ஸ் அன் ரூர்ஸ்

N. பாலா


திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

கிளை:

○ **ஒமேகா ரவல்ஸ் அன் ரூர்ஸ்**
குப்பிளான் சந்திக்கு அருகாமையில் குப்பிளான்.

தீவுப்பகுதி மக்கள் தயவு செய்து எமது தலைமைக் காரியாலயத்துடன் தொடர்புகொள்ளவும்.


# ஈராண்டு நினைவஞ்சலி



## திரு. திருமதி நவரத்தினம்

தோற்றம்: 07 . 11 . 1949 - 02 . 04 . 1955
அழிப்பு: 29 . 04 . 1985

ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றேன்

அம்பாள் ஸ்ரோர்ஸ்,
அரியாலை.

சகோதரி: இந்திரா

05022

நல்வாக்கு

எங்கெல்லாம் சர்வாதிகாரம் உண்டோ அங்கெல்லாம் அநீதியும், ஆத்திரமும் உண்டாகவே செய்யும்.

—மகாத்மா காந்தி

ஆர். ஜி. பில்டிங், ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 25007, 25008

# இதயநாதம்

## உணராதவர்கள் உணராதவர்களே!

"நோய் வந்தபின் குணப்படுத்துவதைவிட, நோய் வராமல் தடுப்பதே சிறந்த வைத்தியசேவை'' என்றொரு பொன்மொழியுண்டு.

கர்ப்பிணித் தாய்மாருக்கு வழங்கப்படும் கிளினிக்சேவைகளும், குழந்தைகளுக்கு வழங்கப்படும் நோய்த்தடுப்பு மருந்துகளும் நோய்வருமுன் தடுப்பதற்கான வைத்திய சேவைகள்.

ஒரு ஆஸ்பத்திரி என்பது நோய் வந்தபின் குணப்படுத்தும் சேவையையும், நோய்வராமல் தடுப்பதற்கான சேவையையும் ஒரே இடத்தில் வழங்கும் மத்திய வைத்திய நிலையமாகும்.

டாக்டர்களை நடமாடும் தெய்வங்கள் என்பர். கால நேரம், இன்பதுன்பம் சகலவற்றையும் மறந்து, மக்கள் சேவையே மகேசுவரன் சேவையென்று தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள் இவர்கள்.

தாதிகளும், ஆஸ்பத்திரி ஊழியர்களும் டாக்டர்களின் வலக்கரம், இடக்கரமாக விளங்குபவர்கள்.

பல நூற்றுக்கணக்கான தியாக மனப்பான்மை கொண்ட டாக்டர்களையும், தாதிகளையும், ஊழியர்களையும் வைத்திய சேவைக்கென வழங்கிவந்த யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிமீது சர்வாதிகாரிகளின் பார்வை விழுந்துவிட்டது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிமீது அடிக்கடி குண்டுத்தாக்குதல் நடைபெறுவதால் ஆஸ்பத்திரி ஊழியர்களின் நன்மை கருதி அதனை மூடவேண்டிய தேவையேற்பட்டுள்ளதாம்.

அரசாங்க அறிக்கை இப்படித்தான் கூறுகின்றது.

முதலில் ஆஸ்பத்திரிமீது குண்டு வீழ்ந்தபோது, "ஆஸ்பத்திரியை நோக்கி அடிக்கவில்லை; சிலவேளை காற்றுக்கு இழுபட்டுச்சென்று வீழ்ந்திருக்கலாம்'' என்று காரணம் சொன்னவர்களும் இவர்கள்தான்.

ஒன்பது நோயாளிகளை மனம் கூசாமல் ஷெல் ஏவிக் கொலை செய்துவிட்டு, "அது நாங்கள் அடித்த ஷெல் அல்ல; பயங்கரவாதிகள் அடித்த ஷெல்'' என்று பச்சைப்பொய் சொன்னவர்களும் இவர்கள்தான்.

அந்தத் தாக்குதல்களையும் படுகொலைகளையும் கண்டித்து, தமிழ் மக்கள் கொதித்தெழுந்து, வீதிவீதியாக ஊர்வலம் நடத்தியபோது ஹெலிகப்டரிலிருந்து பார்வையிட்டவர்களும் இவர்கள்தான்.

இவ்வாறன எத்தனையோ நெருக்கடி வேளைகளிலும், உயிர்பறிக்கப்படலாமென்று தெரிந்த போதிலும்கூட டாக்டர்களும், தாதிகளும், ஊழியர்களும் கடமைக்குச் சென்றார்களேதவிர, பாதுகாப்புக்கேட்டு பகிஷ்கரிப்பு நடத்தவில்லை.

இராணுவச் சிப்பாய்கள் போல லீவுகேட்டு எவரும் தங்களுக்குள் சுடுபடவில்லை.

இராணுவச் சிப்பாய்கள்போல ஆஸ்பத்திரியில் எவரும் தங்கள் தலைமை அதிகாரிகளுடன் வாக்குவாதப்படவில்லை.

இராணுவச் சிப்பாய்கள் போல பயத்தின் காரணமாக ஆஸ்பத்திரியில் எவரும் கடிதம் எழுதிவைத்துவிட்டுத் தற்கொலை செய்துகொள்ளவில்லை.

நாம் மேலே குறிப்பிட்டதுபோல, வைத்தியசேவையை ஆண்டவன் சேவையாகக் கொண்டே யாழ். ஆஸ்பத்திரியின் சகல பணியாளர்களும் தமது பங்களிப்பைச் செய்து வந்துள்ளனர்.

இன்றும்கூட அவர்கள் தொடர்ந்து பணியாற்றத் தயாராகவிருக்கிறார்கள்.

ஆனால் எமது மக்கள் எங்கே நிற்கிறார்கள்? இது எங்கள் வேலையல்ல என்ற மனோபாவம் எதற்காக?

'லெட்டர் ஹெட்'டுகளில் பக்கம் பக்கமாக கண்டன அறிக்கை விடும் சங்கங்களும், மன்றங்களும் ஆகக்குறைந்தது பத்துப் பத்துப் பேரையாவது பங்களிப்புச் செய்ய வழங்க முடியாதா?

ஆஸ்பத்திரி விவகாரம் மக்கள் போராட்டமாக மாற வேண்டும்.

ஒவ்வொருவரது பங்களிப்பும் ஏதோ ஒருவகையில் இங்கு தேவைப்படுகின்றது.

இதனை உணராதவர்கள், தமிழரின் விடுதலைப்போராட்டத்தையே உணராதவர்கள் என்றே கணிக்கப்படுவர்.

★ இலங்கை விவகார இவ்வாரக் கண்ணோட்டம்

# அமெரிக்க ஊடுருவலினால் இந்தியாவுக்கு ஆபத்து என்றால் சோவியத் சும்மா இருக்குமா?

"வோல் ஸ்ரீட் ஜேர்ணல்'' என்ற அமெரிக்காவின் பிரபல பத்திரிகை கடந்த வாரத்தில் வெளியிட்டிருந்த ஆசிரியர் தலையங்கம் இலங்கை இனப் பிரச்சினை விவகாரத்தில் வல்லரசு நாடுகள் காட்டிவரும் அதீத அக்கறையைத் தெளிவாக வெளிக்காட்டியுள்ளது. இலங்கையில் தனிநாடு கோரி போராடிவரும் தமிழ்ப் போராளிகளுக்கு சோவியத் யூனியன் ஆயுத உதவிகள் செய்துவருவதாக இச் செய்தியில் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. இலங்கை உயர் அதிகாரி ஒருவரின் கூற்றை ஆதாரங் காட்டியே இச்செய்தி வெளியிடப்பட்டிருப்பதால், இலங்கை மற்றும் அமெரிக்க அரசாங்கங்களின் கருத்தாகவே இது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கைப் பிரச்சினையில் இன்று ஏற்பட்டுள்ள புதிய நெருக்கடிகளின் மத்தியில் இவ்வாறன கருத்து வெளியிடப்பட்டதன் நோக்கம் என்ன? எந்த உள் நோக்கத்துடன் இவ்வாறனதொரு கருத்து வெளியிடப்பட்டது? போன்ற கேள்விகள் அரசியல் வட்டாரங்களில் எழுப்பப்பட்டுள்ளன.

'வோல் ஸ்ரீட் ஜேர்ணல்' வெளியிட்ட இத் தலையங்கத்தில், திருமலையில் கடற்படைத் தளம் ஒன்றை அமைக்கவும், இலங்கையில் வேறோர் பகுதியில் விமானப் படைத் தளம் ஒன்றை அமைக்கவும் சோவியத் யூனியன் விருப்பம்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பிரச்சினையில் சோவியத் யூனியன் இதுவரையில் நேரடியாக எவ்விடயத்திலும் சம்பந்தப்படாதபோதிலும், சமீபகாலமாக சோவியத் இவ்விடயம் தொடர்பாகத் தெரிவித்துவரும் கருத்துக்கள் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கைப் பிரச்சினையைச் சாட்டாகவைத்து உருவாகிவரும் அபாயகரமான நிலையை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

'வோல் ஸ்ரீட் ஜேர்ணல்' தெரிவித்த குற்றச்சாட்டுகளுக்கு சோவித் யூனியனின் உத்தியோகபூர்வமான செய்தி ஸ்தாபனமான 'நொவொஸ்தி' பதிலளித்துள்ளதுடன், அமெரிக்காமீதும் பல குற்றச்சாட்டுக்களை அது சுமத்தியுள்ளது. "சோவியத் யூனியன் தமிழ் கெரில்லாக்களுக்கு உதவுவதாகக் குற்றச்சாட்டைச் சுமத்துவதன் மூலமாக இலங்கையில் தலையிட அமெரிக்கா முயல்கிறது'' என 'நொவொஸ்தி' பதில் குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளது.

இலங்கையில் "வோய்ஸ் ஆஃப் அமெரிக்கா'' (V.O.A.) வானொலி நிலையம் இயங்க அனுமதித்ததையும் 'நொவொஸ்தி' கடுமையாக விமர்சித்துள்ளது. வி. ஓ. ஏ. யின் வசதிகளைப் பயன்படுத்தி இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் செல்லும் கப்பல்களை அமெரிக்கா கண்காணிக்கக் கூடியதாகவிருக்கும். அத்துடன் அமெரிக்காவின் நீர்மூழ்கிக் கப்பல்களுடனும், ஏனைய படை அணிகளுடனும் அமெரிக்கா நினைத்தவுடன் தொடர்பு கொள்ளக் கூடியதாக இருக்குமெனவும் சோவியத்யூனியன் எச்சரிக்கை விடுத்ததையும் 'நொவொஸ்தி' சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கைப் பிரச்சினையை ஒரு சிக்கலான பிரச்சினையாக மாற்றி அதன்மூலம் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தி இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பதற்ற நிலையை ஏற்படுத்த அமெரிக்கா முயல்வதாக 'பிராவ்தா' குற்றஞ்சாட்டியுள்ளது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தைச் சமாதானப் பிராந்தியமாகப் பிரகடனப்படுத்துவது தொடர்பாக அடுத்த வருடம் நடைபெறவேண்டிய மாநாட்டுக்கு இதனைச் சாதகமாகப் பயன்படுத்தவும் அமெரிக்கா திட்டமிட்டிருப்பதாக 'பிராவ்தா' மேலும் கருத்துத் தெரிவித்துள்ளது.

சோவியத் பத்திரிகைகள் தெரிவித்துள்ள மேற்படி கருத்துக்களிலிருந்து எந்த நோக்கத்துடன் "சோவியத் யூனியன் தமிழ் கெரில்லாக்களுக்கு ஆயுதம் வழங்குகின்றது'' என "வோல் ஸ்ரீட் ஜேர்ணல்'' குற்றஞ்சாட்டியது என்பதை ஓரளவிற்காவது புரிந்துகொள்ளலாம். தமிழர்களுக்கு சோவியத் ராணுவ உதவிகளைச் செய்தால் அதனைச் சாட்டாக வைத்து ஜே. ஆர். அரசுக்கு அதிகளவிலான உதவிகளைச் செய்து இலங்கையில் நிலைகொள்ள அல்லது தளம் அமைக்க அமெரிக்கா விரும்புகிறதென்பதை இதிலிருந்து தெளிவாகப் புரிந்துகொள்ளக்கூடியதாகவுள்ளது.

அர்ஜுனா

இதேவேளையில் இதற்கு முன்னரும் சோவியத் அரச தரப்பிலிருந்து இனப்பிரச்சினை தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட சில கருத்துக்களை இச்சந்தர்ப்பத்தில் மீண்டுமொரு முறை ஞாபகப்படுத்திப் பார்ப்பது நல்லது.

முதலாவதாக சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரான மிகாயில் கொர்பச்சேவ் சோவியத் மாநிலமான விளாடிவொஸ்ரொக்கில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையில் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான சில கருத்துக்களை முன்வைத்தார். உலக நாடுகளின் பிரச்சினைகள் பற்றியும் அவற்றின் ஏகாதிபத்திய நாடுகளின் தலையீடுகள் பற்றியும் உரையாற்றுகையிலேயே அவர் இனப்பிரச்சினை தொடர்பாக முதன் முதலில் பிரஸ்தாபித்தார்.

"இலங்கையின் இனப்பிரச்சினையை ஏகாதிபத்திய நாடுகள் இந்தியாவிற்கு எதிராகத் திருப்பிவிட முயற்சிகளை மேற்கொண்டுள்ளன'' என்பதே சோவியத் தலைவரின் இந்த உரையின் முக்கியம்சமாக இருந்தது.

"சுதந்திரம் எப்பொழுது காத்திரமடைந்து உறுதி பெறுகிறதோ அப்பொழுது அதற்குள் முதலாளித்துவ ஊடுருவல்கள் இடம்பெறவே செய்கின்றன. பஞ்சாப் பிரச்சினை மிகவும் மோசமாக உருவெடுத்துள்ள இவ்வேளையில் இலங்கைத் தமிழர் பிரச்சினைமூலமாகவும் முதலாளித்துவ சக்திகள் இந்தியாவுக்கு எதிராக செயற்பட முனைந்துள்ளன'' என அவர் அப்போது தெரிவித்தார்

முதலாளித்துவ சக்திகள், ஏகாதிபத்திய சக்திகள் என்று சோவியத் தலைவர் கொர்பச்சேவ் யாரைக் குறிப்பிடுகிறார் எனத் தெரிவிக்கப்படாதபோதிலும் அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற இலங்கை அரசுக்கு உதவி புரிந்து வரும் சில நாடுகளையே அவர் அவ்வாறு கூறியுள்ளார் என்பது தெளிவு.

அடுத்ததாக இந்தியாவுக்குச் சில வாரங்களுக்கு முன்னர் விஜயம் மேற்கொண்டிருந்த சோவியத்துணை ஜனாதிபதி எஸ். பீ. எல்லிவ் இனப்பிரச்சினை தொடர்பாகவும் பத்திரிகையாளர்களிடம் சில கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். ஏகாதிபத்திய நாடுகளின் செயற்பாட்டால்தான் இலங்கைப் பிரச்சினை இவ்வளவுக்கு மோசமான நிலையை அடைந்துள்ளது என அவர் அப்போது கூறினார்.

அரசியல், பொருளாதார, இராணுவ ரீதியாக சோவியத் யூனியனுக்கும் இலங்கைக்கும் இடையேயுள்ள உறவுகள் மிகவும் நெருக்கமானதாகவே இன்று காணப்படுகிறது. இந்நிலையில் சோவியத் தெரிவித்துள்ள மேற்படி கருத்துக்களில் இந்தியாவுக்கும் பூரண இணக்கம் உள்ளதாக கருத வேண்டும்.

இப்பிராந்தியத்தில் ஒதுக்கி வைக்கப்பட்ட நிலையிலிருந்த இஸ்ரேலியர்களுக்கு முதன் முதலாக ராஜதந்திர அந்தஸ்து கொடுத்து அவர்களுக்காக 'இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவு'' ஒன்றை அமைப்பதற்கு அனுமதி வழங்கியது ஜே. ஆர் அரசாங்கம்மட்டுமே. தமிழ் கெரில்லாக்களுக்கு பலஸ்தீன விடுதலை இயக்கம் (PLO) பயிற்சிகளை வழங்குகிறது என்ற கோஷத்தை முன்வைத்தே 'ஸியோனிஸ' இஸ்ரேலியர்களை ஜே. ஆர். அரசு இலங்கைக்குள் அழைத்து வந்தது.

இவ்வாறு இஸ்ரேலியர்களை இலங்கைக்குள் கொண்டுவருவதற்கு அமெரிக்காவும் பெரும் முயற்சிகளை மேற்கொண்டதால்தான் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்திலேயே "இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவு'' ஆரம்பிக்கப்பட்டது.

இதன் மூலம் இலங்கை இனப்பிரச்சினையைக் காரணங் காட்டி அதிகளவு நன்மையடைந்த நாடுகளாக இஸ்ரேலும் அமெரிக்காவும் உள்ளன. இலங்கையில் இப்பிரச்சினை இல்லாவிட்டால் இப்பிராந்தியத்தில் இஸ்ரேலியர்களுக்கு ராஜதந்திர அந்தஸ்து வேறு எங்காவது கிடைத்திருக்குமா என்பது சந்தேகமே. இதன் மூலம் அமெரிக்காவும் இஸ்ரேலும் தமிழர் பிரச்சினையை தமது விஸ்தரிப்புக்காகவும் ஆக்கிரமிப்புக் கொள்கைக்காகவும் எவ்வளவுக்குச் சாதகமாகப் பயன்படுத்தியுள்ளன என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இஸ்ரேலின் 'மொஸாட்' உட்பட வெளிநாட்டுக் கூலிப் படைகள் இலங்கைக்குள் நுழைந்திருப்பது இந்தியாவின் பாதுகாப்புக்கும் இந்து சமுத்திரப் பிராந்திய அமைதிக்கும் எவ்வளவுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளன என்பதை இந்தியத் தலைவர்களும் அதிகாரி

...4ஆம் பக்கம் பார்க்க

# தெல்லியூர்துர்க்கைஅம்மன் மணவாளக்கோல விழா

இந்த உலகத்தில் ஒவ்வொரு வஸ்துவும் ஒவ்வொரு விதமான சக்தியினல் நிரப்பியது. ஒருவிதத்திலும் சக்தி இல்லாத பொருளை யாரும் விரும்ப மாட்டார்கள். கடவுளும் இந்த உலகத்தை சிருஷ்டிப்பதிலும் இரட்சிப்பதிலும் சம்காரம் செய்வதிலும் சக்தியின் சம்பந்தத்தைதான் எதிர்பார்க்கிருர்கள் என்ற விசயத்தை யாவரும் அறிவர். இத்தகைய மகிமை தங்கிய சக்தியானது பலவாருகப் பிரிக்கப்பட்டு வெவ்வேறு பொருள் போல் தோன்றினலும் எல்ல வற்றையும் ஒன்று சேர்த்து கவனித்தால் அந்த சக்தியேதான் எல்ல வற்றிற்கும் மேலான தத்துவம் என்பதை யாவரும் எளிதில் அறியக்கூடும்.

தேவியினுடைய பெருமையைப் பற்றி யாரும் எளிதில் வருணிக்க முடியாது. சகல உலகத்துக்கும் தாயாகின்ருள் என்பது லோகம், வேதம், ஸ்ரீமத் இராமாயணம் மற்றும் எந்த இதிகாச புராணங்களையும், ஸ்மிரிதிகள், வேதங்களையும் ஆராய்ச்சி செய்து பார்த்தாலும் ஆங்காங்கு சக்திக்கே முதன்மை அளிக்கின்றது. தாயிடம பக்தியில்லாத பிராணிகள் பிராணிகளாகவே ஆகமாட்டார்கள் ஆகவே சர்வஜனங்களுக்கும் தாயாரான பராசக்தியிடம் அளவற்ற உலக பக்தி ஏற்பட வேண்டியது அவசியமானது.

தேவியானவளைப் பூசிக்கக் கூடிய தன்மை எவனெருவன் பெறப்படுகிருனே அவனுக்கு உலகத்தில் சகல அபூர்வமான சக்திகளும் கிடைக்கப் பெறும். தேவர்களாலும் பூசிக்கக் கூடிய தன்மையை தேவி கொடுத்து அனுக்கிரகம் செய்கிருள். மூக்காம்பிகை ஆலயத்தில் ஒரு ஊமையும், செவிடும் தோத்திரங்கள் பண்ணி துதி செய்ததால் மஹா கவிஞர்களாகப் பாண்டித்யம் பெற்றது என்பது உண்மை.

ஸௌந்தர்யலஹரியில் பராசக்தியின் உத்கர்ஷம் சொல்லப்படுவதை ஒரு சுலோகத்தின் மூலம் அறிவோம்:-

''சிவகா சக்தியா யுக்தோ யதிபவதி சக்த்யா பிரபவிதும்
நசேதேகம் தேபோ நகலு குஷலகா ஸ்பந்திதுமபி அதஸ்பாம்
ஆராக்யாம் ஹரிஹர விருஞ்சாதிபிவபி பிரணந்தும்
ஸ்தோதும் வாதமக நதுபுண்யா பரபவதி''

இந்த சுலோகத்தினல் பராசக்தியான ஜெகன்மாதா சகல தேவர்கட்கும் முதன்மையான தேவதையின் கீழ் ஸ்ரீ சங்கர பகவத் பாதாளரால் புகழப்படுகிருள். அந்தப் பரதேவதையினுடைய சத்திய ரூபமான சம்பந்தம் இல்லாது போனல் சகல வேதங்களினலை சொல்லப்படும் பரமசிவன் என்று சொல்லப்படும் பிரம்மத்துக்கும் யாதொரு விதமான காரியத்தையும் செய்வதில் சக்தியற்ற நிலை ஏற்படுகிறது. சக்தியுடன் கூடியிருக்கும் போதுதான் பஞ்சகிருத்தியம என்ற ஐந்து விதமான காரியங்களையும் செய்து தன்னிடத்தில் உள்ள ஈஸ்வரத்துவம் என்ற தன்மையை பிரகடனம் செய்துள்ளார்.

''ஜநிவா பச்சிமம் ஜென்ம ஜதிபா சங்கரகா ஸ்வயம்
தேனைவ லம்யதே விதயா ஸ்ரீமத் பஞ்சத சாஸ்கரீ''
என்ற சாஸ்வதமே பிரமாணம் ஆகும்.

இந்தியாவில் பல கோயில்களில் சக்தியானவள் பல நாமங்களைப் பூண்டு அருள் செய்கின்ருள். அந்த வகையில் மதுரை மீனட்சி, காஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி, திருக்கடவூர் அபிராமி இப்படியான பல உருபங்களைக் கொண்டு விளங்குகின்ற சக்தி இலங்கையிலும் பல பெயர்களுடன் வீற்றிருக்கின்ருள். நாகத்தில் நாகமணி போல வடபால் அமைந்த வீணுபுரத்தில் தெல்லிமாநகரில் துர்க்காபுரம் என்னும் திவ்ய சேத்திரத்தில் துர்க்கா என்னும் பெயருடன் இருந்து திருவருள் பாலிக்கிருள். இந்த அம்பிகையை பல நூற்ருண்டுக்கு முன்பு காசியிலிருந்து வந்த துர்க்கா உபாசகரால் கொண்டு வரப்பட்டு பிரதிஷ்டை செய்து வழிபட்டார்கள் என்பதற்கு பல சான்றுகள் உண்டு சம்புரோட்சண மகாகும்பாபிஷேக பிரதி தினமாக விளங்கும் மணவாளக் கோலத்திருவிழா தினத்தில் அம்பாளுடைய திருவருள் கருணையில் சுபீட்சமும் சாந்தியும் விமோசனமும், அமைதியும் தரும்படி துர்க்காதேவியினுடைய பாதாரவிந்தங்களைச் சிக்கெனப் பிடித்து பிரார்த்தித்து சரண் அடைவோமாக.

சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்கள்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

# மண்டைதீவுக்கு மின்சாரம் தடைப்பட்டு ஒருவருடம்

(காவலூர்)

மண்டைதீவு கிராமத்திற்கு இலங்கை மின்சாரசபையின் மின் விநியோகம் தடைசெய்யப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகின்றது. இந்த ஒரு வருட காலமாக மண்டை தீவு மக்கள் மின்சார வசதியின்றி மிகவும் கஷ்டமடைகின்ருர்கள்.

இவர்கள் இதுவரை பாவித்து வந்த மின்சார உபகரணங்கள் யாவும் துருப்பிடிக்கத் தொடங்கியுள்ளன. யாழ்ப்பாணத்திலிருந்து பண்ணை வீதி வழியாக இம் மின்சார விநியோகம் மண்டை தீவிற்கு விநியோகிக்கப்பட்டு வந்தது. இராணுவம் மண்டைதீவு சந்தியில மினி முகாம் அமைத்த பின்பு இம் மின்சாரத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு விட்டன.

மண்டை தீவு கிராமத்திற்கு மீண்டும் மின்சாரம் வழங்கும்படி இலங்கை மின்சார சபையினரை மண்டைதீவு பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும், கத்தோலிக்க குருமாரும், பிரஜைகள் குழுவினரும் வேண்டியும் இது வரை ஒரு பலனும் கிடைக்கவில்லை என மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

## சீரணி நாகபூஷணி உற்சவம

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய், சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

சித்திரைப் பூரணையன்று தேர்த்திருவிழாவும், தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

# செவன நிதி திட்டத்தின்கீழ் பச்சிலைப்பள்ளியில் வீடமைப்பு

(எழுதுமட்டுவாள்)

மனிதனகப் பிறந்த ஒருவன் தனக்கென ஒரு உறைவிடம் அமைக்த பின்னரே ஏனைய வசதிகளைத் தேட முயல்கிருன். உணவிலும் பார்க்க உறைவிடம் மனிதனுக்கு அத்தியாவசியமாகிறது. பச்சிலைப் பள்ளி தெங்குப் பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம் தனக்குக் கிடைத்த இலாபப் பணத்தில் ஒதுக்கீடு செய்து செவன நிதித் திட்டத்தில் வீடுகளை அமைத்துக் கொடுத்தது பாராட்டக் கூடிய விடயமாகும். இத்திட்டத்தை ஏனைய சங்கங்களும் கடைப்பிடித்தால் வடபகுதியில் ஓரளவு வீடில்லாப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

இவ்வாறு முகமாலை, கிளாலி பகுதிகளில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. தெய்வசிகாமணி கூறினர்.

பளை தெங்குப் பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்க ஆதரவுடன் செவன நிதித் திட்டத்தின் கீழ் இவ்வீடுகள் அமைக்கப் பட்டன.

அரசாங்க அதிபர் திரு. தெய்வசிகாமணி தொடர்ந்து பேசுகையில், சர்வதேச வீடமைப்பு ஆண்டாக இவ்வருடத்தை ஐக்கிய நாடுகள்சபை பிரகடனப்படுத்தினலும் கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் மக்களின் கஷ்ட நிலை காரணமாக இப்பகுதியில் வீடுகள் அமைக்கும் பணி குறைந்தே காணப்படுகிறது. கிளிநொச்சி மாவட்டத்தில் வீடமைப்புகளை அதிகரிப்பதற்கு ஒவ்வொரு சங்கங்களும் முன்வரவேண்டும் என்ருர்.

பளை உதவி அரசாங்க அதிபர் திரு. செ. கந்தசாமி தமது தலைமையுரையில்'' வசதியுள்ள பலர் வறுமையில் வாடும் மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கத் தயங்கும் இக்கால கட்டத்தில் இச் சங்கம் துணிவுடன் செயற்பட்டு வீடுகளை அமைத்துக் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும். அரசாங்கம் வீடமைப்புக் கடன்கள் வழங்கிவரும் இக் காலத்தில் தனியார் சங்கங்களும் இவ்வாறு வீடுகளை அமைத்துக் கொடுத்தால் இந் நாட்டில் வீடில்லாப் பிரச்சினை விரைவில் நீங்கிவிடும்'' என்ருர்.

கிளிநொச்சி மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசத் தலைவர் திரு. ஏ. பி. ஜோர்ஜ் உரையாற்றும்போது, ''அரசாங்கம் ஐக்கிய நாணய சங்கங்கள் ஊடாக கடன்களை வழங்கி வருகிறது. இதேபோல் தனியார் சங்கங்களும், வசதி படைத்தோரும் ஐக்கிய நாணய சங்கங்கள் ஊடாக கடன்களைக் கொடுத்து நாட்டின் வீடில்லாப் பிரச்சினையைத் தீர்க்க முன்வரவேண்டும்'' என்ருர்.

இவ் வைபவத்தில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். எஸ். அமிர்தலிங்கம், கிளிநொச்சி மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகாரசபை பொது முகாமையாளர் திரு. ஏ. யோசப் மரியான், யாழ். மாவட்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் (பனம்பொருள்) திரு. ச. வேலாயுதபிள்ளை, சங்கத்தலைவர் திரு. இ. பரமு ஆகியோரும் உரையாற்றினர்.

சங்கப் பொது முகாமையாளர் திரு. ச தம்பிராசா நன்றியுரை கூறினர்.

## அமெரிக்க. . .

...3ம் பக்கத் தொடர்ச்சி

களும் பலமுறை தெரிவித்தே வந்துள்ளனர்.

இவ்வாருன நிலையில்தான் சோவியத் யூனியன் தமிழ் கெரில்லாக்களுக்கு ஆயுதம் வழங்குவதாக ''வோல் ஸ்ரீட் ஜேர்ணல்'' குற்றஞ்சாட்டியுளளது. PLO தமிழ் கெரில்லாக்களுக்கு பயிற்சியளிப்பதாகக் கூறிக் கொண்டு இஸ்ரேலியர்களை இலங்கைக்குள் கொண்டு வந்ததுபோல அமெரிக்காவின் ஆதிக்கத்தை இலங்கையில் மேலும் அதிகரிப்பதற்கான தொரு முயற்சியாகவே சோவியத் யூனியன் மீது இவ்வுன புதிய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டதாகவே எண்ண வேண்டியுள்ளது.

இவ்வாறு இனப்பிரச்சினையைச் சாட்டாக வைத்து இஸ்ரேலியர்களதும் அமெரிக்கர்களினதும் ஆதிக்கம் இலங்கையில் அதிகரித்து வருவதையே ''இந்தியாவுக்கு எதிராக இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இலங்கைப் பிரச்சினையைத் திசை திருப்பிவிட சில ஏகாதிபத்திய சக்திகள் முயல்கின்றன'' என சோவியத் தலைவர் கொர்பச்சேவ் குறிப்பிடுகிருர்.

இவ்விடயத்தைப் பொறுத்த வரையில் இலங்கை அரசு தொடர்ந்தும் இதே விதமான கொள்கையைக் கடைப்பிடித்து இதே பாதையிலேயே செல்வதற்கு முனைந்தால் இலங்கை அரசுக்கு எதிராக பல்வேறு நிர்ப்பந்தங்களைப் பிரயோகிக்க வேண்டிய நிலைக்கு இந்தியா தள்ளப்படலாம். ஏனெனில் இலங்கையின் இவ்வாருன நடவடிக்கைகள் இந்தியாவின் பாதுகாப்புக்கும் இப் பிராந்தியத்தில் தான் ஒரு வல்லரசாக இருக்க வேண்டுமென்ற இந்தியாவின் விருப்பத்திற்கும் எதிரானவையாகவே உள்ளன. இதற்காக இந்தியா மேற்கொள்ளக் கூடிய எந்த நடவடிக்கையையும் சோவியத் யூனியனும் ஆதரிக்கும் என்றே கூறலாம்.

எது எப்படி இருப்பினும் இலங்கை இனப் பிரச்சினையைச் சாட்டாக வைத்து தென்னுசியப் பிராந்தியத்தில் ஏற்பட்டுவரும் வல்லரசு நாடுகளின் ஆதிக்கம் இப்பிரச்சினை சுலபமாகத் தீர்ந்து விடாது என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

# நெடுந்தீவில் சிரங்கு நோய்; தடுப்பு மருந்துக்கு ஏற்பாடு

(நெடுந்தீவு)

''விரைவாகப் பரவிவரும் சிரங்கு நோயினல் எல்லா வயதினரும் தற்போது பாதிப்படைந்து வருகின்றனர். குறிப்பாக நெடுந்தீவில் அநேகர் பாதிப்படைந்ததுடன் நோயைக் குணமாக்கும் மருந்தும் இங்கு கிடைப்பது கஷ்டமாக உள்ளது. எனினும் நாம் எடுத்துக்கொண்ட முயற்சியால் மிக விரைவில் நெடுந்தீவின் மூன்று கிராம சேவகர் பிரிவையும் உள்ளடக்கிய பிரதேசத்தில் வாழும் அனைவருக்கும் சிரங்கு நோய்த் தடை மருந்தினை வழங்கவுள்ளோம்''

இவ்வாறு நெடுந்தீவு வைத்திய அதிகாரி திரு. வி. யோகேஸ்வரன் தொற்றுநோய்த் தடைமருந்து வழங்குவது குறித்து நலன்புரிச் சங்கத்தினரும், பொதுமக்களும் ஒழுங்கு செய்த கூட்டத்திற் கலந்து கொண்டு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசிய போது, மக்கள் சுகாதாரமாக வாழப் பழகுவதுடன், உடனுக்குடன் ஏற்ற வைத்திய வசதிகளைப் பெறுவதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நலன்புரிச் சங்க செயலாளர் திரு. என். நடராசா '' தடை மருந்துகளைப் பொது மக்கள் முறைப்படி பெறுவதற்கு ஏற்ற ஒழுங்குகளைத் தமது சங்கம் செய்து தரும்'' என்று கூறினர்.

## பாடசாலைக்கு பண உதவி

(சாவகச்சேரி)

கொடிகாமம் தவசிகுளம் கிராமஅபிவிருத்திச்சங்கம்ஆயிரத்துநூற்றிஎண்பது ரூபாவை கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திற்காக பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர் டாக்டர் ஏ. குகலவிடம் கையளித்தது.

# யாழ். மாநகரசபையின் அவசர முதலுதவிச் சேவை

யாழ். மாநகரசபையின் அவசர முதலுதவிச் சேவையினர் யாழ். நகரில் தற்பொழுது தமது சேவையினை ஆரம்பித்துள்ளனர். இந்தக் குழுவில் முதலுதவிப் பயிற்சி பெற்ற 18 மாநகரசபை ஊழியர்களும், 12 தொண்டர்களும் அடங்குவர்.

இவர்களுடன் சென்.ஜோன் அம்புலன்ஸ் படை, ஆரம்ப சுகாதார நிலையத் தொண்டர்களும் அவசர வேளைகளில் இணைந்து கொள்ளுவர். இச் சேவையில் பங்கேற்கும் தொண்டர்கள் எவரும் சீருடை அணிந்திருக்க மாட்டார்கள். ஆனல் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் முகமாக 'யாழ். மாநகர முதலுதவி சேவை' என தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் எழுதப்பட்ட கைப்பட்டிகளை அணிந்திருப்பர்.

ஷெல், பொம்பர் தாக்குதல்களின்போது கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி இருப்பவர்களை மீட்டெடுத்து அவர்களுக்கு முதலுதவிச் சிகிச்சை வழங்கி வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைப்பதுடன், சேதமடைந்த கட்டடங்களில் உள்ள பொருட்களை பாதுகாப்பதிலும் இத் தொண்டர்கள் முக்கிய கவனம் எடுப்பர் என மாநகர ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

## ஒத்திவைப்பு

(சாவகச்சேரி)

அறவழிப் போராட்டக்குழுவினல் நடாத்தப்படவிருந்த பாலர் கல்வி ஆக்கப்பொருள் சாதனை பொருட்காட்சி தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆலய சங்காபிஷேகம்

(உடுவில்)

சங்குவேலி வெட்டுக்கட்டைப் பிள்ளையார் ஆலய சங்காபிஷேக மணவாளக்கோல விழா எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றுபகல் அன்னதானமும் வழங்கப்படும்.

# பொசுப் பொழுது

ஓடும் பஸ்ஸிலும், சினிமாத் தியேட்டருக்குள்ளும் அவசர பிரசவங்கள் நிகழ்ந்துள்ளமையை ஏற்கனவே செய்திகளாக நாம் படித்துள்ளோம்.

இப்போது பதுங்கு குழிக்குள் ஒரு தாய் பிரசவம் நிகழ்த்த வேண்டிய நிலைமை இங்கு ஏற்பட்டுள்ளது.

இதனைக் காலத்தின் கோலம் என்பதா? தர்மிஷ்டத்தின் தவப்பயன் என்பதா?

இது ஒருபுறமிருக்கட்டும். பதுங்கு குழிக்குள் பிறந்த அந்தக் குழந்தைக்கு என்ன பெயர் வைக்கலாம்?

ஆணாக இருந்தால் 'ஷெல்'வன், பெண்ணாக இருந்தால் 'ஷெல'வி என்று வைத்தால் எப்படியிருக்கும் என்று கேட்கிறார் ஸ்ரீமான் வாசகர்.

உக்கிரன்

# தென்னாபிரிக்க வெள்ளையர் தேர்தல்களுக்கு அமெரிக்கா கண்டனம்

(வாஷிங்டன்)

தென்னாபிரிக்காவில் கடந்த புதன்கிழமை வெள்ளையருக்கு மட்டும் நடைபெற்ற தேர்தல்களை அமெரிக்க அரசு கண்டனம் செய்துள்ளது இதுபற்றி அமெரிக்க வெளிவிவகார அமைச்சு அதிகாரியும் கண்டனம் வெளியிட்டார்.

தென்னாபிரிக்காவில் இடம் பெறும் இனப்பாகுபாட்டை உடனடியாக நீக்குமாறும் அமெரிக்கா தொடர்ந்தும் வற்புறுத்தி வருவதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

பிரிட்டோரியா ஆட்சியில் வெள்ளையர் அல்லாத பெரும்பான்மையினர் பங்கு பற்ற வேண்டும் என்டதை அமெரிக்கா ஆதரிக்கிறது எனவும் அவர் கூறினார்.

தென்னாபிரிக்காவின் உண்மையான பிரச்சினைகளை தீர்க்குமாறும் அந்த அதிகாரி தென்னாபிரிக்க ஜனாதிபதி போத்தாவை வற்புறுத்தியுள்ளார். பெரும்பான்மையினரான கறுப்பின மக்களுக்கு பொருளாதார, அரசியல் வாழ்வை ஏற்படுத்துவதில் தான் தென்னாபிரிக்காவின் எதிர்காலம் இருக்கிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

இத்தேர்தல்களை பிரிட்டிஷ் பத்திரிகைகளும் கண்டனம் செய்துள்ளன.

## ஆசிய பசிபிக் பிராந்தியம் இராணுவ மயமாகின்றது

(புதுடில்லி)

ஆசிய - பசுபிக் பிராந்தியம் ராணுவ மயம் ஆக்கப்படுவது அபாயகரமான வகையில் அதிகரித்து வருகிறது.

1985 இல் மட்டும் ஆசிய-பசுபிக் நாடுகளின் ராணுவச் செலவு 5600 கோடி டாலராக இருந்தது. லண்டனில் உள்ள ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று இதை தெரிவித்துள்ளது.

இது இன்றைய உலகின் மொத்த ராணுவச் செலவில் மூன்றில் இரு பங்குக்கும் மேலாகும்.

தற்போது ஆசியா, ஏராளமான ஏகாதிபத்திய ராணுவ தளங்களைக் கொண்ட பிரதேசமாக மாறி வருகிறது.

இந்தக் கண்டத்தில், அணு ஆயுத ஏவுகணைகள் உள்ளிட்ட அமெரிக்க ராணுவ ஆயுதக் குவிப்பு அதிகரித்து வருகிறது. ஜப்பானிய அரசாங்கக் கொள்கையில் பழி வெறிப் போக்குக்கு அமெரிக்கா தூபமிடுகிறது.

நாடுகளை ஒன்றுக்கொன்று எதிராக நிறுத்துவதற்கும், நாடுகளுக்கிடையில அவநம்பிக்கைகளை ஏற்படுத்துவதற்கும், பழைய தகராறுகளைக் கிளறி விடுவதற்கும் புதிய பூசல்களைத் தூண்டி விடுவதற்கும் அமெரிக்கா எத்தனித்து வருகிறது என்று இங்கு கருதப்படுகிறது.

ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் சமாதானம், பந்தோபஸ்து ஒத்துழைப்பு ஆகியவற்றை நிலைநிறுத்துவதற்கு பரந்து விரிந்த கொள்கை ஒன்றை உருவாக்கவேண்டும்.

இதற்கான கரு டில்லி பிரகடனத்தில் இடம்பெற்றுள்ளது. இதன் பொருட்டு, ஆசிய நாடுகள் கடந்த பல வருடங்களில் எடுத்த ஆக்கபூர்வமான முன்முயற்சிகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். டில்லிப் பிரகடனத்தின் கருத்துக்கள் மேலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்றும் அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

## பஸ் விபத்து 20 பேர் பலி

(பாங்கொக்)

தாய்லாந்தில் பஸ் ஒன்று மலைச்சரிவுடன் மோதியதால் பஸ்ஸில் பயணம் செய்த பள்ளிக்கூட ஆசிரியர்கள் 20 பேர் ஸ்தலத்திலேயே பலியாகினர். மேலும் 25 பேர் பலத்த காயங்களுக்குள்ளாகினர்.

## செல்வ விநாயகர் ஆலயத்தில்

யாழ்ப்பாணம், கொய்யாத்தோட்டம் புதுவீதி, ஞான செல்வவிநாயகர் ஆலயத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கோளறுபதிக மண்டபப் பூர்த்திவிழா இம்மாதம் பத்தாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் ஆலய இந்து இளைஞர் மன்றம் நடாத்திய போட்டிகளில் வெற்றியீட்டியோருக்குப் பரிசில் வழங்கும் வைபவம் மாலை மூன்றரை மணிக்கு நடைபெறும். நல்லை ஞானசம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் பரிசில்களை வழங்குவார்.

## அதர்மமான செயல்

''விமானக் குண்டு வீச்சு ஷெல் தாக்குதல், ஹெலிகப்டர் தாக்குதல் போன்றவற்றால் தினமும் பல்லாயிரக் கணக்கான அப்பாவித் தமிழர்களை கொன்று குவிக்கும் அரசாங்கம் அத்தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மக்களை சிகிச்சையளித்து பிழைக்க வைக்கும் வசதிகள் நிறைந்த யாழ். வைத்தியசாலையை மூடி விடுவது அதர்மமான செயலாகும்''

இவ்வாறு வட பிராந்திய லொறி போக்குவரத்துச் சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் ஆ. மு. இராஜகோபால் விடுத்துள்ள அறிக்கையொன்றில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

## அனைவரும் சித்தி

யாழ்ப்பாண தொழில் நுட்பக் கல்லூரியில் 1984, 1985, 1986 ஆகிய ஆண்டுகளில் வர்த்தகப் படிப்புக்களுக்கான தேசிய சான்றிதழ் கல்வி கற்ற சகல மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

குறிப்பிட்ட பாடத்தின் விரிவுரையாளரான அப்துல் றமீது மஃறூப் அவர்களின் அதிசிறந்த விரிவுரைகளினாலேயே மாணவர் சித்தியடைந்துள்ளார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பன்னவேலை பயிற்சி வகுப்பு

(சங்கானை)

பண்ணாகம்- மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நடைபெற்றுவரும் பன்னவேலை பயிற்சி வகுப்பில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு தினமும் ஐந்து ரூபா வீதம் ஆறுமாதத்துக்கு ஊக்குவிப்பு உற்சாக வேதனம் வழங்கப்படும் எனவும் மேற்படி பயிற்சியில் சேர்ந்து பயன் பெற விரும்புவோர் உடன் சங்கத்தின் நிர்வாகிகளுடன் தொடர்பு கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

## இன்றைய பலன்

**மேடம்:** வாக்குக்கலகம், மனையிலே சஞ்சலம், புத்திரர் ஒருவர்க்கு ரோகம், வெளியிடத்துச்செய்தியால் நன்மை.

**இடபம்:** புத்திரப்பேறு, புகழான செய்கைகள் நடக்கும், கல்வியால் நன்மை, கலைஞர்கள் கௌரவம் அடைவர்.

**மிதுனம்:** மாதாவழிப்பகை, வைத்தியச் செலவு, வியாபாரத்தால் நட்டம், வாகன நட்டம், கழுத்தில் ரோகம்.

**கடகம்:** கீர்த்தி, நற்காரிய விருத்தி, பொருட்பேறு, குடும்ப மகிழ்ச்சி, வாக்கு வசிகரம், பிரயாணத்தால் நன்மை.

**சிங்கம்:** வாக்குப்பலிதம், பணவரவு, இல்லறச் சிறப்பு, கணவன் மனைவியிடையே குதூகலம், புத்திரரால் பணவரவு.

**கன்னி:** தூரதேசப்பிரயாணம், தொழில் மூலம் பகை, சகோதர வழியால் நன்மை சகல காரியசித்தி.

**துலாம்:** நெடுநாளைய நட்புப் பகையாகும், கொடுக்கல் வாங்கல் தடை, பெரியோர் ஆசி, புத்திரர் ஒருவருக்குத்தொழில் வாய்ப்பு.

**விருச்சிகம்:** தடைப்பட்ட காதல் நிறைவேறும், கல்வியாளர்க்குக் கௌரவம், தொழிற்பேறு.

**தனுசு:** தொழில்வாய்ப்பு, புதிய நட்பு இனபந்துக்களால் நன்மை, பூமிப்பேறு தனதானியவிருத்தி.

**மகரம்:** இரட்டிப்பான பொருள்வரவு, வெளியூர்ச் செய்தி. புத்திர மகிழ்ச்சி, விடா முயற்சி.

**கும்பம்:** கவலை அதிகம், தாராள சிந்தை, எல்லோர்க்கும் உதவி செய்வீர்கள், வீண் பழி கேட்பீர்கள்.

**மீனம்:** விவாகம் கைகூடும், இல்லறச் சிறப்பு. விருந்துபசாரம், சகோதரர்வரவு, மாமன் வழி உதவி.

யாழ். சோதிடர்
ச. அரியநாயகம்

## நூல் வெளியீடு ஒத்திவைப்பு

திருநெல்வேலி ராமகிருஷ்ணாலயத்தின் ஏற்பாட்டில் இன்று பிற்பகல் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவிருந்த பேராசிரியர் ப. சந்திரசேகரத்தின் 'ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தத்துவம்' நூல் வெளியீட்டு விழா குடாநாட்டின் இன்றைய சூழ்நிலை காரணமாக மறு அறிவித்தல் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.


# "ஷப்ரு"

## யுனிக்கோ பினன்ஸ் லிமிட்டெட் யாழ். அலுவலகம்

# இடம் மாற்றம்

**அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!**

உங்கள் நலன் கருதி 'ஷப்ரு' நிதி நிறுவன அலுவலகத்தைப் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றியுள்ளோம்.

நீங்கள் குடாநாட்டின் எந்தப் பக்கத்திலிருந்து வருபவர்களாயிருந்தாலும்சரி. எமது புதிய அலுவலகத்திற்கு சிரமமின்றிப் பாதுகாப்பாகத் தயக்கமின்றி வந்துபோகலாம்.

ஆம், எமது அலுவலகம் நகரின் மத்தியில் பலாலிவீதியும் நாவலர்வீதியும் சந்திக்கும் இடத்தில் நாவலர் வீதி, 230 ஆம் இலக்கக் கட்டடத்துக்கு இடம் மாற்றப்பட்டு உள்ளது.

1. மானிப்பாய் வீதி மூலம் யாழ்நகர் வரும் வாடிக்கையாளர்கள் ஐந்து சந்தியில் இறங்கி நாவலர் வீதி ஊடாகவும்;
2. காங்கேசன்துறை வீதி ஊடாக யாழ்நகர் வரும் வாடிக்கையாளர்கள் மனோகரா சந்தியில் இறங்கி நாவலர் வீதி ஊடாகவும்;
3. பலாலி வீதி மூலம் நகருக்கு வரும் வாடிக்கையாளர்கள் பலாலி வீதி— நாவலர் வீதி இலுப்பையடிச் சந்தியில் இறங்கியும்;
4. பருத்தித்துறை வீதி மூலம் யாழ்நகருக்கு வருவோர் ஆனைப்பந்தி ஊடாகவும்;
5. பிரதான வீதி மூலம் யாழ்நகர் வரும் வாடிக்கையாளர்கள் ஆரிய குளத்திலிருந்து பலாலி வீதி ஊடாகவும்;

புதிய அலுவலகத்துக்கு இலகுவாக வந்து சேரலாம்.

எமது புதிய அலுவலகம் எதிர்வரும் திங்கட்கிழமை (11 - 5 - 87) தொடக்கம் இயங்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

மூளாய், சுழிபுரம், வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, சங்கானை, உடுவில், மானிப்பாய் பகுதி வாடிக்கையாளர்களின் நலன் கருதி மானிப்பாயில் உப அலுவலகம் ஒன்று விரைவில் திறக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொது முகாமையாளர்,
ஷப்ரு நிதி நிறுவனம்.

05023

09-05-1987 சனிக்கிழமை

# முரசொலி

தேசிய தமிழ்த் தினசரி

MURASOLI

★ ஆணையாளர் சிவஞானம் கேட்கிருர்:

# இன பிரச்சினைக்கு மருந்து ஆஸ்பத்திரியை அழிப்பதா

"யாழ். போதனு வைத்திய சாலையை மூடுவதென்ற அரசின் முடிவு நோயைக் கண்டு பிடித்து அதற்கு மருந்து கொடாமல், நோய்கண்ட இடத்தை வெட்டிவிடுவது போல் அமைந்துள்ளது. இனப் பிரச்சினை என்ற நோய்க்கு யாழ். போதனு வைத்திய சாலையை அகற்றுவது எந்த விதத்திலும் மருந்தாக அமையாது" இவ்வாறு நேற்று யாழ். நகரமக்களும், நகர உத்தியோகத்தர்களும் வைத்திய சாலையை அகற்றுவதைக் கண்டித்து மேற்கொண்ட ஊர்வலத்தின் இறுதியில் உரையாற்றிய யாழ். மாநகர ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் "வைத்தியசாலையை அகற்றும் செயல் மரண புள்ளி விபரங்களையும், பட்டியலையும் அதிகரிக்கவே உதவும். பாதுகாப்புக் காரணங்களுக்காக வைத்திய சாலையை மூடும் நடவடிக்கையானது இந்த நகர மக்களினதும், தமிழ்மக்களினதும் அடிப்படை உரிமைகளை மீறும் ஒரு செயலாக அமைந்துள்ளது. இங்கு இப்போது அரசின் மூடும் உத்தரவை அடுத்து நகரின் அமைப்பு பெருமளவு பாதிப்படைந்துள்ளது. நகர போக்குவரத்து, வர்த்தக ஒழுங்குகள் சீர்கெட்டுள்ளன. வைத்தியசாலையை மூடும் தீர்மானத்தை எடுத்தவர்கள் அதன் விளைவுகளை ஊகிக்க மட்டுமே முடியும். இங்கு அதன் பயனுக ஏற்படும் விளைவுகளை அவர்களால் பார்க்க முடியாது. பாரம்பரியமாக தமிழ்மக்களின் நகராக இருந்து வந்த யாழ் நகரை சிதைவுறச்செய்யும் முடிவை அரசு உடன் இரத்துச்செய்ய வேண்டும்" என்ருர்.

ஆணையாளரிடம் இருந்து மகஜரைப் பெற்றுக்கொண்டு உரையாற்றிய யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. இராமநாதன் "வைத்திய சாலையை மூடும் செயல் அடிப்படை உரிமைகளை மறுக்கும் ஒரு நடவடிக்கையாகும். இப்பிரதேச மக்கள் அனைவரையும் இது பாதிக்கும்" எனக் குறிப்பிட்டார்.

## வல்வெட்டித்துறையிலும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(வல்வெட்டித்துறை)

தமிழீழ மக்களின் துயர் துடைக்கும் வசதிகள்கொண்ட ஒரே வைத்திய சாலையான யாழ். போதனு வைத்திய சாலையை இடமாற்றம் செய்ய வேண்டாம்என கோஷங்கள் எழுப்பியவாறு ஆயிரக் கணக்கான பொது மக்கள், வல்வை அரசினர் வைத்திய சாலை டாக்டர்கள். தாதிமார், ஊழியர்கள் யாவரும் வல்வை சந்தியிலிருந்து ஊர்வலமாகச் சென்றனர்.

வல்வையிலிருந்து புறப்பட்ட ஊர்வலம், உடுப்பிட்டி, பொலிகண்டி, வதிரி. நெல்லியடி ஊடாகச் சென்று பருத்தித் துறை உதவி அரசாங்க அதிபரின் காரியாலயத்தைச் சென்றடைந்து யாழ். போதனு வைத்தியசாலையை மூடவேண்டாம் என கூறும் பல காரணங்கள் அடங்கிய மகஜர் ஒன்றினை இவர்கள் கையளித்தனர்.

## இலங்கைத் தமிழர் பிரச்சினையை ஆராய தமிழகத்தின் சர்வகட்சிகள் மாநாடு

இலங்கைத் தமிழர்களின் நிலைபற்றி விவாதிக்க தமிழக முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன் சர்வகட்சி மாநாடு ஒன்றை உடனடியாகக் கூட்ட வேண்டும் என, இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எம். கல்யாணசுந்தரம் தெரிவித்துள்ளார்.

நேற்று திருச்சியில் நிருபர்களிடம் பேசிய கல்யாணசுந்தரம், இந்திய அரசு இலங்கை இனப்பிரச்சினை பற்றி ஐக்கிய நாடுகள் சபையில் விவாதித்து இலங்கைத் தமிழர் படுகொலை செய்வதற்கு எதிராக சர்வதேசக் கருத்தை உருவாக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். இலங்கைத் தமிழர்கள் வெளியேற்றம் குறித்தும் அவர் கவலையடைந்தார்.

### யாழ்ப்பாணத்தின்...

களை தாம் கண்டித்து வந்துள்ளதாகவும் அவர் கூறினுர். போராளிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவே எரிபொருள் தடை என இலங்கை அரசு கூறுகிறது. ஆனுல் இதனுல் பாதிக்கப்படுவது யாழ்ப்பாணப்பகுதி மக்களே. இதனுல் அவர்களின் உணவுற்பத்தி, பொருளாதாரம், சாதாரண வாழ்க்கை என்பன பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. மருந்துவகைகளும் கிடைக்க முடியாதுள்ளது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இப்பிரச்சினையை சர்வதேசப் பிரச்சினையாக்குவதன் மூலம் இஸ்ரேல், பாகிஸ்தான் போன்ற நாடுகளின் நேரடி உதவிகளைப் பெறுவதற்கு இலங்கை முயன்று வருவதாகவும், அதனுல் இலங்கை மீது பொருளாதார ததடைகள் விதித்து அதனை தனிமைப் படுதத வேண்டும் என்றும் பல உறுபபினர்கள் கூறினுர்கள்.

திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர் திரு. கோபால சாமி தமது உரையில், இலங்கை அரசு யாழ்ப்பாணம் மீதான பொருளாதார, தொலைத்தொடர்பு தடைகள் மூலம் அங்குள்ள தமிழர்களை தனிமைப்படுத்தியுள்ளது. தமிழ் மக்களை பூண்டோடு ஒழிக்க நடவடிக்கை எடுத்துள்ளது என்ருர்.

### மாநகரசபை...

யாழ். செயலகத்தை சென்றடைந்தது. ஊர்வலத்தின் முன்னணியில் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி. க. மோகனதாஸ், மாநகர சுகாதார வைததிய அதிகாரி டாக்டர் திருமதி கதிர்காமர் உட்பட பல அதிகாரிகள் நடந்து வந்தனர். 'மந்திகை, தெல்லிப்பளையும் ஷெல தாக்கும் பகுதிகள்' 'நோயாளிகளும் போராளிகளா?' 'நகர்ப்புற அமைப்பை பாதிக்காதே' 'அகால மரணங்களை அதிகரிக்காதே' போன்ற பல சுலோகங்கள் ஊர்வலத்தில் கொண்டு செல்லப்பட்டன.

ஊர்வலம் செயலகத்தை அடைந்ததும் மாநகர ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம், மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. இராமநாதனிடம் மகஜரைக் கையளித்தார். இந்த மகஜரில் பிரஜைகள் குழுக்கள், சனசமூக நிலையங்களின் சமாஜங்கள் உட்பட பத்துக்கும் அதிகமான வெகுஜன அமைப்புக்கள் ஒப்பமிட்டுள்ளன.

### டில்லி...

பிரச்சினைக்கான டிசம்பர் 19 யோசனைபற்றிய பேச்சுக்களை தொடர்வது பற்றிய குறிப்பும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

### உயர் அதிகாரி ...

ஆஸ்பத்திரி மூடப்படுவதால் இவரது சேவை யாழ்ப்பாணத்தில் தேவைப்படாதென்று கூறப்பட்டு இடமாற்றம் வழங்கப்பட்டதாம்.

ஆனுலும் இப்போது ஆஸ்பத்திரிலைய மூடும் யோசனை ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் அந்த அதிகாரியின் மாற்றமும் ரத்தாகலாம் எனத் தெரிகின்றது.

### யாழ்...


வேண்டியுள்ள பல்வேறு பிரச்சினைகளைப் பற்றியும் பேராசிரியர் விதியானந்தன் அமைச்சர் அத்துலத் முதலியிடம் எடுத்து விளக்கினுர்.

போராளிகளுக்கும் இராணுவத்தினருக்கும அடிக்கடி இப்பகுதியில் இடம் பெற்று வரும் மோதல்களின்போது வைத்திய சாலை தாக்குதலுக்குள்ளாவதால் அப்பகுதியை தாக்குதல் அற்ற அமைதிப பிராந்தியமாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்ற பிரேரணையை இரு தரப்பினரும் வலியுறுத்தினுர்கள்.

வைத்தியசாலைப் பகுதியிலிருந்து தாக்குதல்கள்கோட்டை முகாம் மீது மேற் கொள்ளப் படுவதாலேயே தாம் பதில் தாக்குதலை மேற்கொள்வதற்கு நிர்ப்பந்திககப்படுவதாகதேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அததுலத்முதலி இச்சந்திப்பின் போது தெரிவிததார். வைத்தியசாலைப்பகுதியிலிருந்து தாக்குதல்கள் எதுவும் மேற்கொள்ளப்படக்கூடாது என உறுதியளிக்கப்பட்டால்அப்பகுதியை நோக்கி ராணுவத்தினர் தாக்குதல் எதனையும மேற்கொள்ள மாட்டார்கள் எனவும்அமைச்சர் அத்துலத்முதலி மேலும் தெரிவிததார்.

இப்பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்காக யாழ். அரசாங்க அதிபர் திரு. எம்.பஞ்சலிங்கம் தலைமையில் கொழுமபு சென்றிருந்த தூதுக்குழுவில் வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் சி. எஸ். நச்சினுர்க்கினியன், டாக்டர்கள்சிவகுமாரன், ஜெகாபசுபதி, பிலிப்ஸ் உட்பட ஆஸ்பத்திரிக் குழுவினரும் சென்றிருந்தார்கள்.

நேற்று முன்தினம் இத் தூது குழுவினர் போதனு வைததிய சாலைகள் அமைச்சின் செயலாளர் டாக்டர் டி. டி. சமரசிங்காவை சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டது தெரிந்ததே நேற்றைய அமைச்சர் லலித் அத்துலத் முதலியுடனுன சந்திப்பின்போது அரசாங்க வைத்தியர்கள் சங்கமும் கலந்து கொண்டது.



பருத்தித்துறை, புலோலி பகுதிகளில் நடாத்தப்பட்ட பொம்பர் தாக்குதல்களின் போது மந்திகையிலுள்ள புலோலி மெதடிஸ்தமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபம் சேதமடைந்துள்ளதைப் படம் காட்டுகின்றது. [பருத்தித்துறை நிருபர்]

### அச்சுவேலி ..

டைந்ததுடன் லொறியின் கிளினரும் படுகாயமடைந்தார்.

ஹெலிகப்டரிலிருந்து ஏழுக்கும் மேற்பட்ட ஷெல்கள் வீதியில் நின்ற மக்களை நோக்கி ஏவப்பட்டன. பிப்ரி கலிபர் தாக்குதலும் ஹெலிகப்டர்களில் இருந்து தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதல்களினுல் வீதியில் சென்று கொண்டிருந்தவர்களும்கடைகளில் நின்றவர்களும் படுகாயமுற்றனர்.

இச் சம்பவத்தில் அச்சுவேலி நியூநஜீரா முஸ்லிம் ஹோட்டலில கடமைபுரியும் மணியம் என்றழைக்கப்படும் 30 வயது நபரே கொல்லப்பட்டவராவார். இவரது சடலம் நேற்று பிற்பகல் யாழ். அரசினர் வைத்தியசாலை சவச்சாலைக்கு கொண்டுவரப்பட்டது. திருமதி சி. யேசுகடாட்சம் (30) அச்சுவேலி. பாலு (19) [இவர் மலையகத்தை பிறப்பிடமாகக் கொண்டவர்]. நா. இம்மானுவல் (35) அச்சுவேலி. அந்தோனிப்பிள்ளை றெமி (18) அச்சுவேலி, என். பேரானந்தப் (24) மல்லாகம், ஞானப்பிரகாசம் செல்வராஜா (60) ஆகியோர் படுகாயமுற்று யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில இருவரின் நிலை கவலைக்கிடமாயுள்ளது.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் இருந்த கிருமிநாசினி விற்பனை நிலையத்தில் கடமை புரிந்து கொண்டிருத்த மலையகத்தைசேர்ந்த பாலு 19) என்ற இளைஞரின் கால் துண்டிக்கப்பட்டது. அவர் உடனே கடையில் இருந்த கிருமிநாசினியை அருந்தி தற்கொலை செய்ய முயன்றதால் ஆபத்தான நிலையில் சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

## நாவற்குழியில் நேற்றும் சூடு

நேற்று பிற்பகல் கோப்பாய், நாவற்குழி, கைதடி பகுதிகளில் இரு ஹெலிகப்டர்கள் தாக்குதல்களில் ஈடுபட்டிருந்தன. இத்தாக்குதல்களினுல் பல வீடுகள் சேதமடைந்தன.

### யாழ்ப்பாணத்தில்...

ஆயுதப் படையை ஐம்பதாயிரம் பேரைக் கொண்டதாகப் பெருப்பித்தும் பிரபாகரனைக் கைது செய்ய முடியாதிருக்கிறது" என்றும் ஸ்ரீமாவோ தெரிவித்துள்ளார்.

"அல்பிரட் துரையப்பா கொலை சம்பந்தமாக குட்டிமணி தேடப்பட்டவந்தபோது இந்தியாவில் ஒளித்திருந்தார். அவரை இலங்கைக்குத் திருப்பி அனுப்புமாறு இந்திரா காந்தியிடம் கேட்ட போது அவர் அவ்வாறே செய்தார். ஆனுல் இன்று இலங்கை கேட்கும் எந்த உதவியையும் இந்தியா செய்யும் நிலையில் இல்லை. ஜெயவர்த்தனுவின் பயங்கரவாதக் கொள்கை இந்தியாவின் நட்பைப் பகைக்கச் செய்துவிட்டது" என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழ் எம். பீக்களைப் பதவியிழக்கச் செய்த அரசியலமைப்பின் ஆருவது திருத்தத்தையும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கண்டித்துள்ளார்.

## காலமானுர்

### திருமதி திரவியம் பிரகாசம்

இவர் திரு. ஆசீர்வாதம் திரவியம் (அரசாங்க கட்டிட ஒப்பந்தகாரர்.) அவர்களின் அன்புமனைவியும் திருமதி றஞ்சிதம், திருமதி ஜெயராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் திரு. ஜெயபாலன் (அரசாங்க கட்டிட ஒப்பந்தகாரர்) திரு. குணநாயகம் ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி செல்லத்துரை திரேசம்மா, திருமதி அந்தோனிப்பிள்ளை றெஜினு ஆகியோரின் அருமைச் சகோதரியுமாவார்.

ஈமக்கிரியை இன்று காலை 9.00 மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

அன்புக் கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்ருர், உறவினர்.

34/ A. பீச் றோட், யாழ்ப்பாணம்.

05024

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, 62ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப்பிரிவில் 09-05-87 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.